**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070220225822

Volume: 7

Issue: 2

Month: October

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 13.07.2022

Accepted: 25.08.2022

Published: 01.10.2022

Citation:
Vennila, N. "Goddess Worship of Mu Thinaikudi Muma." *Shanlax International Journal of Tamil Research,* vol. 7, no. 2, 2022, pp. 23–33.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i2.5822

*Corresponding Author:
kvbs1215vennilan@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Goddess Worship of Mu Thinaikudi Muma

**Dr. N. Vennila**
*Associate Professor Department of Tamil*
*Krishnasamy Collge of Science, Arts and*
*Management for Women, Cuddalore*
*https://orcid.org/0000-0003-1143-1562*

**Abstract**
In the worship of thinaikudis, the names of the deities and the ritucels are set up to honor the feminine. In a different environment from the ancient tamis who wore afraid of nature, natural products,trees and bodies of water not to be fecered and running, running was to be feared and. That natural enargy that gives fear is called sur, Anangu and sur mean suffering and fear. Anangu means suffering she who brings great suffering. The word surara daughter gives fear Goddess is meaning. In the beginning surum and Anang were tought formless. And then those to speak gracefuldy and at the same time without taunting.

**Key Words:**
Anangu, Muruku, Pazhaiyol, Katalkezhu Selvi, Kadukezhu Selvi, Amman, Seematti, Surmakal, Kotravai, Perukattukkotravai, Kamar Selvi, Kadu Kizhar, Kadukizhavol, Kataikataul, Kollippavai

**References**
1. U.V.saminatha Iyar-Kurunthogai .Thenninthiya Saiva Sithantha Pathippu. Chennai
2. ...................1949 ingurunooru,
3. S.v .Suppiramaniyan Sanga Ellakkiyam Moolamum Uraium, Manivasagar Pathippagam-Chennai
4. Jayapal.r akananooru - NH Chennai
5. Somasuntharam- Kalithogai- Thenninthiya Saiva Sithantha Pathippu, Chennai
6. Nachinarkkiniyar- Kalithogai- Thenninthiya Saiva Sithantha Pathippu, Chennai
7. Nagarasan-kurunthogai-NH, Chennai
8. Pinnathoor Narayanasamy-Natrinai- Thenninthiya Saiva Sithantha Pathippu, chennai
9. Vengatasdasamy Nattaer – Agananooru Thenninthiya Saiva Sithantha Pathippu, Chennai
10. Ragavaiyangar Kurunthokai- Annamalai University, Chidambaram
11. Ramaiya – Natrinai – Varthaman Pathippagam, Chennai.
12. Sanmukanpillai - Kurunthokai- Karanthai Thmizh University.
13. K.p.aravanan – Maravazhipadu- Dravita Appi Oppidu.ulagathamizh Araichi Niruvanam.
14. Kailasapathi Pantaithamizhar Vazhum Vazhipadum.chennai Pari Nilaiyam.
15. T.T. Kosampi- 1989. Pantai Thamizhar Varalaru - Ulagathamizh Araichi Niruvanam.
16. Sanmugam Pillai Sangathamizharin Vazhipadum Satangukalum- Ulagathamizh Araichi Niruvanam.
17. Tholkappiyam – Porulathikaram Manivasagam Pathippagam, Chidambaram.
18. P.l.samy –1975-Tamil Elakkiyathil Daaitheiva Vazhipadu. Nh, Chennai

**Manitaviyal Books**

1. Pathavachalabharathi (2002). Thamizhar Manitaviyal-Ataiyalam Pathippagam, Thiruchi
2. ........ (2005). Manitaviyal Kotpadu-Manivasagam Pathippagam, Chidambaram 3
3. ……. (2015). Panar Enavaraiviyal Ataiyalam
4. Panpattiyal Nookkil Pantaithamizhar Samayamarapukal – Pilc-Pondycherry.
5. Pathavachalabharathi - Panpaattumanitaviyal - Manivasagam 1Pathippagam, Chidambaram.
6. Thamizharmanaitaviyal - Panpaattumanitaviyal - Manivasagam Pathippagam, Chidambaram.

# திணைக்குடிகளின் பெண் தெய்வ வழிபாடு

*முனைவர் ந. வெண்ணிலா*
தமிழ்த்துறை, இணைப்பேராசிரியர்
கிருஷ்ணசாமி மகளிர் அறிவியல் கலை மற்றும்
மேலாண்மையியல் கல்லூரி, கடலூர்

***ஆய்வுச்சுருக்கம்***

*திணைக்குடிகளின் வழிபாட்டுமுறையில் பெண்மையைப் போற்றும் வகையில் தெய்வங்களின் பெயர்களும், வழிபாட்டு முறைகள் அமைகின்றன. பண்டைத் தமிழர் இயற்கையைக் கண்டு அஞ்சிய மனநிலையிலிருந்து மாறுபட்ட சூழலில் இயற்கைப் பொருட்களான காடும் மலையும் மரங்களும்நீர்நிலைகளும் அச்சம் தரத்தக்கன அல்ல என்றும் இயங்கும், இயக்கும் அச்சம்தரத்தக்கது என்றும் கருதினர். அச்சம் தரும் அந்த இயற்கை இகந்த ஆற்றலை, சூர் என்றும் அணங்கு என்றும் குறிப்பிட்டனர். அணங்கு, சூர் என்னும் இப்பெயர்கள் துன்பம், அச்சம் என்னும் பொருள் தருவன. அணங்கு என்றால் துன்பம் தருவது என்று பொருள். சூர் என்னும் சொல்லுக்கு அச்சம் என்பது பொருள். ஆரணங்கு என்பது மிக்க துன்பத்தைத் தருபவள் என்று பொருள்படும். சூரர மகள் என்னும் சொல்லுக்கு அச்சம் தரும் தெய்வப்பெண் என்பது பொருளாகும். தொடக்கத்தில் சூரும், அணங்கும் உருவமற்றனவாகவே கற்பித்துக் கொள்ளப்பட்டன. பின்னர் அவை உருவுடையனவாகவும் அதே சமயத்தில் பல் பேதமற்றனவாகவும் பேசப்பட்டன.*

***முக்கியச் சொற்கள்:*** *அணங்கு, முருகு, பழையோள், கடல்கெழு செல்வி, காடுகெழு செல்வி, அம்மன், சீமாட்டி, சூர`மகள், கொற்றவை, பெருகாட்டுக்கொற்றவை, காமார் செல்வி, காடு கிழாவோள், காடைக்கடவுள், கொல்லிப்பாவை.*

திணைக்குடிகளின் வழிபாட்டு முறையில் பெண் தெய்வங்களை வழிபடும் வழக்கம் பெரும்பான்மையாகக் காணப்படுகிறது. பெண் தெய்வ வழிபாட்டு முறை சிறுதெய்வங்களின் வழிபாட்டு முறை இலக்கியங்களில் மிகுதியாகக் காணக்கிடைக்கின்றன.

தமிழ்நாட்டுத் தாய்த்தெய்வம் பற்றிய குறிப்புகள் பெரும்பாலும் இலக்கியங்களில் இருந்துதான் கிடைக்கின்றன. சங்க இலக்கியங்களும் பிற்கால இலக்கியங்களும் தரும் குறிப்புகளின்படி குழந்தை பெற்ற தாயினைக் குறிக்கும் சொல்லாகச் 'செல்வி' என்ற சொல்லே காணப்படுகின்றது. 'காடுகெழு செல்வி', 'கடல்கெழு செல்வி' ஆகிய தொடர்களால் தாய்த் தெய்வம் சுட்டப்படுகின்றது. பிற்காலத்தில் வந்த அம்மன் என்ற சொல்லைப் போலச் 'செல்வி' என்ற சொல் முற்காலத்தில் பயன்படுத்தப்பெற்றுள்ளது. 'அம்மன்' என்ற சொல்லுக்குச் 'சீமாட்டி' அல்லது "உயர்குலப்பெண்" என்பது பொருளாகும். அக்காலத்தில் தாய்த் தெய்வம் இப்போது போலஊரின்நடுவில்இருக்கவில்லை.அதன் வாழிடம் காட்டுக்குள் இருந்தது. தாய்த் தெய்வத்தின் வழிபாட்டில் "துணைங்கைக் கூத்து" நடைபெறும். இந்த முற்குறிப்புகளோடு பின் வந்த திருமுருகாற்றுப்படை அவளுக்குப் "பழையோள்" (பழைவள்) என்ற பெயரையும் கொடுத்து முருகனை அவள் மகனாகவும் ஆக்கி வைக்கின்றது. சிலப்பதிகாரம் பிறந்த காலத்தில் அவள் தந்தைத்தெய்வத்தில் (சிவனின்) மனைவி ஆக்கப்படுகின்றாள். அதன் பின்னர்க் கிழக்கிந்தியப் பகுதியில் இருந்து வந்த காளி வழிபாடும் இது குறித்த கதைகளும் பழைய தாய்த்தெய்வ வழிபாட்டோடு இணைக்கப்பட்டன. *(தொ.பரமசிவன்-2011. 163-164)*

திணைக் குடிகளின் வழிபாட்டு முறையில் பெண்மையைப் போற்றும் வகையில் தெய்வங்களின் பெயர்களும், வழிபாட்டு முறைகளும் அமைகின்றன. பண்டைத் தமிழர் இயற்கையைக் கண்டு அஞ்சிய மனநிலையிலிருந்து மாறுபட்ட சூழலில் இயற்கைப் பொருட்களான காடும் மலையும் மரங்களும் நீர்நிலைகளும் அச்சம்தரத்தக்கன அல்ல என்றும் இயங்கும், இயக்கும் அச்சம்தரத்தக்கது என்றும் கருதினர். அச்சம் தரும் அந்த இயற்கை இகந்த ஆற்றலை, சூர் என்றும் அணங்கு என்றும் குறிப்பிட்டனர். அணங்கு சூர் என்னும் இப்பெயர்கள் துன்பம், அச்சம் என்னும் பொருள் தருவன. அணங்கு என்றால் துன்பம் தருவது என்று பொருள். சூர் என்னும் சொல்லுக்கு அச்சம் என்பது பொருள். ஆரணங்கு என்பது மிக்க துன்பத்தைத் தருபவள் என்று பொருள்படும். சூரர மகள் என்னும் சொல்லுக்கு அச்சம் தரும் தெய்வப்பெண் என்பது பொருளாகும். தொடக்கத்தில் சூரும், அணங்கும் உருவமற்றனவாகவே கற்பித்துக் கொள்ளப்பட்டன. பின்னர் அவை உருவுடையனவாகவும் அதே சமயத்தில் பால் பேதமற்றனவாகவும் பேசப்பட்டன. காலப்போக்கில் சூரும், அணங்கும் பெண்களாகப் பாவிக்கப்பட்டன என்று நா.இளங்கோ கூறுகின்றார் *(2011-பண்டைத் தமிழ் மரபு-பக்-176-177)*

"காடு, மலை, கடல், சுரம் முதலான பழைய கால நாகரிகப் பகுதிகளில் வாழ்ந்த குடிகளிடம் தாங்கள் வாழ்ந்த இயற்கைப் பகுதிகளான மரங்கள், மலைச்சாரல்கள், மலைஉச்சிகள், காடுகள், மலைச்சுனைகள், நீரூற்றுகள், நீர்நிலைகள், கடற்துறைகள், காட்டுப்புக்கள், பிலங்கள், ஆள் அரவமற்ற இடங்கள், இரவுக்காலம் ஆகியவற்றில் கடவுள் சூர், அணங்கு, சூலி, முருகு ஆகியவை தங்கினர், நடமாடினை என்ற நம்பிக்கை வெகு ஆழமாக வேர்விட்டிருந்ததைப் பாடல்களின் வழியாகக் காணலாம்" என்று சங்ககாலத் தமிழ்ச் சமூகத்தில் கடவுள் உருவாக்கம் என்னும் கட்டுரையில் கூறுகின்றார் ராஜ் கௌதமன். *(2006:176)*

**சூர்**

சூர் என்ற சொல் பெண் தெய்வத்தைக் குறிப்பது. "சூர்" என்பதற்கு வளைவு *(ஐங்-71,275)* மூங்கில் என்று ஐங்குறுநூறும், அச்சம் *(நற்-7, 268)* என்று நற்றிணையும், முருகனைப்பாடும் பெண் *(34)* என்று நற்றிணையும் விளக்கம் தருகின்றன.

**சூது ஆர் குறுந் தொடிச் சூர் அமை நுடக்கத்து**
**(ஐங்கு.71)**

என்னும் ஐங்குறுநூற்றுப் பாடல் அடியில் "சூர்" என்பது கண்டார்க்கு அச்சமூட்டும் என்று கூறுகின்றது.

**இலங்கும் அருவிச்**
**சூர் மலை நாடனை அறியாதோனே**
**(ஐங்கு. 249)**

என்னும் பாடல் அடியில் தீண்டி வருத்தும் தெய்வம் என்று கூறுகின்றது.

**சூருடை நனந் தலைச் சுனை நீர் மல்க**
**(நற். 268)**
**பெரு வரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்**
**(நற். 34)**

ஆகிய சங்கப்பாடல்கள் சூர் என்பதற்கு வருத்தம் என்று விளக்கம் கொடுக்கிறது. சூர் என்னும் தெய்வம் மலையில் உறைவது என்பதை,

**நேர்கொள் நெடுவரைக் கவாஅன்**
**சூரர மகளிரின் பெறற்குஅரி யோளே**
**(அகம். 162)**
**சூர்புகல் அடுக்கத்து**
**(அகம். 359)**
**சூர்மலை நாடன் கேண்மை**
**(குறுந். 105)**
**சூருடை அடுக்கத்து ஆரம் கடுப்ப**
**(குறுந். 376)**

என்றும் "சூர்" பற்றிக் கூறுகின்றது. மேலும் சுனை அல்லது நீர்நிலையில் தங்குவது (அகம்.91, 198) ஓமை மரத்தின் அடியில் வசிப்பது என்று (அகம்:297) என்று சங்க இலக்கியம் கூறுகின்றது.

**கருங் கண் கருனைச் செந்நெல் வெண்சோறு**
**சூருடைப் பலியொடு கவரிய**
**(நற். 367)**

என்னும் பாடல் அடியில் அச்சத்தை ஊட்டிப் பல் வாங்குவது என்றும் கூறப்படுகிறது.

### நிறைசுனையில் உறையும் சூர்மகள்

நீர் நிறைந்த சுனையில் வாழ்கின்ற தெய்வம் நிறைசுனையில் உறையும் சூர்மகள் என்றழைக்கப்படுகின்றது. மழை, ஆறு, கடல் என நிறைந்த இடங்களையும் பெண் தெய்வங்களாகக் கருதப்பட்டன. ஆறு, கடல் என்பன பெரிய நீர்நிலைகள், சிறிய நீர்நிலைகளான குளங்களும் பெண்தெய்வங்களோடு தொடர்புப்படுத்தப்பட்டன.

**ஏர்மலர் நிறைசுனை உறையும்**
**சூர்மகள் மாதோ என்னும்**
**(அகம்.198)**

என்று அகநானூறு கூறுகின்றது.

இது போன்று நீர்துறைகளிலும், நிலத்திலும் பெண் தெய்வங்கள் உழறுவதாக பண்டைய மக்கள் நம்பினர். நீர்த்துறைகளில் இருக்கும் கடவுளுக்குக் கள்ளையும் மாலையையும் நிமிர்ந்து நேர்கொண்ட கொம்பினையும் சேர்த்துக் காணிக்கையாகக் கொடுத்து தன் கொண்ட நோய் தணியும்படி வழிபாடு செய்தனர்.

**கள்ளும் கண்ணியும் கையுறை யாக**
**நிலைக்கோட்டு வெள்ளை நால் செவிக்கிடாஅய்**
**நிலைத்துறைக் கடவுட்டு உளப்பட ஓச்சி**
**(அகம். 156)**

துறையினிடத்து உறையும் தெய்வம், நினைத்துறைக் கடவுள் என அழைக்கப்பட்டதாக அகநானூறு கூறுகின்றது.

### மலையில் உறையும் தெய்வம்

அச்சம், துன்பம் என்னும் பொருளுடைய சூர் என்னும் பெண்தெய்வம் சூரர மகளிர் என்று கூறப்படும் மலை தெய்வம் என்றும் கூறப்படுகிறது. மிக உயரமான மலையிடத்து இருக்கும் தெய்வம் என்பதை,

**அவன் மலைப்**
**போருடை வருடையும் பாயா,**
**சூருடை அடுக்கத்த கொயற்கு அருள்**
**தழையே (நற். 359)**

என்று நற்றிணை கூறுகின்றது.

**நேர்கொள் நெடுவரைக் கவாஅன்**
**சூரர மகளின் பெறற்குஅரி யோளே**
**(அகம். 162)**
**சூர்புகல் அடுக்கத்து மழைமாறு முழுங்கும்**
**(அகம். 359)**
**கார்புகன்று எடுத்த சூர்புகல் நனந்தலை**
**(அகம். 303)**

என்னும் அகநானூற்றுப் பாடல் அடிகளும்,

**வெறிஉறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்**
**சூர்மலை நாடன் கேண்மை**
**(குறுந்.பா-105)**

**மன்உயிர் அறியாத் துன்அரும் பொதியில்**
**சூருடை அடுக்கத்து ஆரம் கடுப்ப**
**(குறுந். 376)**

என்னும் குறுந்தொகைப் பாடல்களும் பண்டைக் காலத்தில் "சூர்" என்னும் தெய்வம் மலையில் உறையும் தெய்வம் என்பதற்குச் சான்று பகர்கின்றன.

### நீர்நிலையில் தங்கும் தெய்வம்

"சூர்" என்னும் அச்சம் தரக்கூடிய இத்தெய்வம் மலையில் தங்கும் என்பது போல் நீர்நிலைகளிலும் உறையும் என்று இலக்கியங்கள் கூறுகின்றன. பருவம் அடைந்த பெண்கள் நீர்நிலைகளுக்குச் செல்லுதல் கூடாது என்னும் வழக்கம் முற்காலந்தொட்டு இன்றைய காலம் வரை வழக்கமாகவும் இருந்து வருகின்றது.

அருவிகள் நீர் அற்றுப்போன பெரிய பக்க மலையின் கண் தீண்டி வருத்தும் தெய்வம் என்றும் கவிரம் என்னும் பெயரினையுடைய அச்சம் தரும் பக்க மலையில் நீர் நிறைந்த சுனையில் வாழும் சூர் என்னும் தெய்வம் என்று அகநானூறு கூறுகின்றது. சான்று

**அருவி ஆன்ற பெருவரை மருங்கில்**
**சூர்ச் சுனை துழை, நீர்ப்பயம் காணாது**
**(அகம். 91)**

**கவிரம் பெயரிய உருகெழு கவாஅன்**
**ஏர்மலர் நிறைசுனை உறையும்**
**சூர்மகள் மாதோ**
**(அகம். 198)**

என்பதாகும். மேலும் ஓமை மரத்திக்கண் தெய்வம் உறையும் என்றும் கூறப்படுகிறது. சான்று,

**சூர்முதல் இருந்த ஓமைஅம் புறவின்**
**(அகம்.297)**

என்பதாகும்.

சூர் பெண்ணின் உடலில் தங்கி அச்சம் தரும் என்று அகநானூறு(304) கூறுகின்றது. சூர் என்னும் பெண் தெய்வம் பற்றிய செய்திகள் அடைமொழி அல்லது உவமையாகவே வருகின்றன. இத்தெய்வம் வைதிகத் தாக்கம் இல்லாத தெய்வம் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

### கொல்லிப்பாவை

சூர் தெய்வத்தைப் போன்றே கொல்லிப்பாவையும் வைதிக தாக்கம் இல்லாத சிறுதெய்வமாகும். அக்கொல்லிப்பாவை மிகவும் அழகு வாய்ந்தது. தெய்வத்தச்சனால் உருவாக்கப்பட்டதும் தன் பார்வையால் அசுரர்களைக் கொல்லும் தன்மையுடையதுமாகும். இத்தெய்வம் ஓரி ஆண்ட கொல்லி மலையில் வீற்றிருந்ததாக இலக்கியச் சான்றுகளின் வழி அறியமுடிகிறது. முள்ளர்க்குத் தலைவனாகிய காரி என்பவனின் கெடாத புகழ் இவ்வுலகத்தில் நிலைநிறுத்திய வலிமையான வில்லினை உடைய ஓரியைக் கொன்று சேர மன்னர்க்கு மீட்டுக் கொடுத்து உரிமையாக்கிய வேர்ப்பலா நிறைந்த கொல்லிமலையில் தெய்வத் தச்சனால் செய்யப்பட்ட அழிவின்றி நிலை பெற்றிருக்கக் கூடியது பலரும் புகழும் பாவை.

**செவ்வேல்**
**முள்ளூர் மன்னன் கழல் தொடிக் காரி**
**செல்லா நல்அசை நிறுத்த வல்வில்**
**ஓரிக் கொன்று சேரலர்க்கு ஈத்த**
**செவ்வேர்ப் பலவின் பயன்கெழு கொல்லி**
**நிலைபெறு கடவுள் ஆக்கிய**
**பலர்புகழ் பாவை அன்னநின் நலனே**
**(அகம். 209)**

கொல்லிமலையின் அருவி ஒன்றின் அருகே உள்ள பாறையின் மேற்குப் பகுதியில் கொல்லிப்பாவை அமைந்திருந்தது. அது காற்று, இடி, மழை, நிலநடுக்கம் எவற்றினாலும் அழிந்து போகாது இக்கொல்லிப் பாவை தன்னைப் பார்த்தவரைக் கவர்ந்திழுக்கும் அரிய கண்களை உடையது என்று குறுந்தொகை கூறுகின்றது. சான்று,

**பெரும்புண் பொறையன் பேஎம் முதிர் கொல்லிக்**
**கருங்கட் தெய்வம் குடவரை எழுதிய**

**நல்இயல் பாவை அன்ன இம்**
**மெல்இயல் குறுமகள் பாடினள் குறினே**
**(குறுந். 89)**

சங்க இலக்கியங்களில் கொல்லிப்பாவை பற்றிய செய்திகள் மிகுதியாகக் காணப்படுவதால் சங்க காலந்தொட்டு கொல்லிப்பாவைப் பற்றிய சிந்தை திணைக் குடி மக்களிடையே நிலவியுள்ளது என்பதை அறியமுடிகிறது. கொல்லிமலையின் மேற்குப் பகுதி சார்ந்த மலையிடத்தே முன்பு தெய்வத்தாலே வடிவமைத்து வைக்கப்பட்ட புதிய வகையில் இயங்குகின்ற பாவை (நற்:192), கடவுள் தன்மை பெறுமாறு அமைந்திருக்கும் கொல்லிப்பாவை (அகம்:62) என்று சங்க இலக்கியங்கள் கொல்லிப்பாவை பற்றி கூறுகின்றன.

சங்கப் பாடல்கள் குறிப்பிடும் கொல்லிப்பாவை வட்டாரச் சார்புடைய தெய்வம். இது குகையில் வரையப்பட்ட ஓவிய வடிவில் இருந்திருக்க வேண்டும். இது ஒரு வகையில் மலையுறை தெய்வம் தான் சங்கப்பாடல்களில் இத்தெய்வம் மாலை வெயிலுக்கு உவமையாகச் சொல்லப்படுவதால் இவள் காடுகிழாள் பாவை என்ற தெய்வம் என்றும், இவள் விந்திய வாசினி தெய்வத்தை ஒத்தவள் என்றம் கூறுவர்.

*(அ.கா.பெருமாள்-பண்டைத்தமிழர் சமய மரபுகள்.2011. 10)*

## கொற்றவை வழிபாடு

வீரத்தின் அடையாளமாக, சங்ககாலத்தில் கொற்றவை வழிபடப்பட்டது. போர் மேற்செல்லும் மன்னர்கள் கொற்றவையை வழிபடுவதை முக்கிய தருணமாகக் கருதினர். பேய்க்கும், கொற்றவைக்கும் நெருங்கியத் தொடர்புடையதை இலக்கியச் சான்றுகள் சுட்டுகின்றன. கொற்றவை அகத்திணைப் பாடல்களில் அச்சமூட்டும் தெய்வமாகவும், புறத்திணையில் வெற்றியின் அடையாளமாகவும் சுட்டப்படுகிறது. தொல்காப்பியம் கொற்றவைக்கு தனித்துறையை வகுத்துள்ளது.

**மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த**
**கொற்றவை நிலையும் அகத்திணைப் புறனே**
**(தொல்.59)**

போரின்போது போர்க்களத்தில் மறவர்களது மறத்தினைச் சேர்த்து ஒலிக்கும் துடிநிலை சிறக்கின்ற கொற்றவை நிலை என்பது பொருளாகும்.

மறத்தொழிலுக்குச் சிறந்த கொற்றவைக்குப் பரவுக்கடன் கொடுக்குங்கால் அவளது நிலைமை கூறுதல் என்று கூறுவார் நச்சினார்க்கினியர். (தொல்காப்பியம் - பொருளதிகாரம், மூலமும் உரையும் நச்சினார்க்கினியர். 1983)

கொற்றவை பற்றி பஞ்சாங்கம் கூறுகையில், ஆதி இனக்குழுச் சமூகக் கூறுகளும், அரசு, அதிகாரம் உருவாவதற்கான நிலவுடைமைச் சமூகக்கூறுகளும் பரவலாகப் பதிவாகியுள்ளன. இத்தொகுப்புப் பாடல்களின் மூலம் அகத்தில் பெண்ணின் உடம்பை ஒடுக்கி ஆணின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதும் புறத்தில் ஆணின் உடம்பைக் கொண்டாடி அதிகார அரசை உருவாக்கும் அரசியலாக அமைந்துள்ளது. இச்சூழலுக்கு நேர்மாறாகத் தாய்வழிச் சமூகத்தில் மேலாண்மை கொண்டிருந்த பெண் உடம்பின் குறியீடாகத்தான் "கொற்றவை" என்கிற பெண் தெய்வம் உருவாக்கம் பெற்றிருக்க வேண்டும் அழித்தொழிக்கப்பட்ட தாய்வழிச் சமூகம் குறித்த "அச்சத்தின்" குறியீட்டாக கொற்றவை வழி பொருளுக்கும் மனித மனத்தின் அச்சத்திற்கும் நெருங்கிய உறவுண்டு எனவே வருத்தும் தெய்வமாக அகத்திணைப் பாடல்களில் பெருவாரியாக "அணங்கு" என்ற சொல்லால் சுட்டப்படுகிறாள். மேலும் மனித உயிர்ப்பலி குருதிப்பலி கொடுப்பதன் மூலமாக வெற்றி தேடித் தரும் தெய்வமாகப் புறத்திணையில் புனைந்து வழிபடுவதன் மூலம் ஒடுக்கப்பட்ட தாய்வழிச் சமூகத்தின் நினைவை தந்தைவழிச் சமூக உருவாக்கத்திற்கான வரமாகத் தக வமைத்துக் கொள்ள முடிந்திருக்கிறது. இத்தகையது தகவமைக்கிற தந்திரங்களுள் ஒன்று தான் முருகன் என்கிற ஆண் கடவுளுக்குத் தாயாகக் கொற்றவையைப் புனைந்து கொள்வது. முருகனை வெற்றி வெல்போர்க் கொற்றவைச் சிறுவசுசு (வரி.258) என்கிறது திருமுருகாற்றுப்படை. எனவே கொற்றவை வழிபாடு என்பது தாய்வழிச் சமூகத்தின் அழிவிலிருந்தும் தந்தைவழிச் சமூகத்தின் மிச்ச சொச்ச அடையாளமே என்று சங்க இலக்கியத்தில் காணப்படும் கொற்றவை குறித்த குறிப்புகள் ஆகும் என்கிறார்.

***(பஞ்சாங்கம். பண்டை தமிழர் சமய மரபுகள்- 2011.196)***

**காடுடை கடவுள்**

கொற்றவை காடுகிழான் தெய்வம், காடுடை கடவுள், ஆயிரை மலைக்கடவுள் என்று இலக்கியங்கள் அடையாளப்படுத்துகின்றன. வனத்துர்க்கை என்றழைக்கிறார் நச்சினார்க்கினியர்.

**கான்அமர் செல்வி அருளலின்**
**(அகம். 345)**

என்று அகநானூறு கூறுகின்றது. கொற்றவை தெய்வம் வாழும் பருத்த அடிமரத்தைக் கொண்ட வேப்பமரத்தடியில் கவர்ந்து கொண்டு வந்த கொழுத்தப் பசுவினை வாளால் வெட்டிப் பலி கொடுத்து பசுவின் குருதியை மரத்தின் மேல் தெளித்துப் பலியிடுவர்.

சங்கப் பண்பாட்டின் வழிபடு தெய்வமாக இருந்த கொற்றவை சிலப்பதிகாரக் காலத்தில் பெரும் வளர்ச்சியுடன் மாற்றப்பட்டாள். நற்றிணைக் காலத்தில் பெரிய அளவில் நாட்டார் தெய்வமாகப் பார்வதியின் அம்சமாக மாற்றப்பட்டாள் இந்த மாற்றம் வேகமாக நடந்திருக்கிறது. இவள் கொற்றவை என்ற தனிப்பெயரை விடுத்துப் பல்வேறு பெயர்களைப் பெற ஆரம்பித்தாள். *(அ.கா.பெருமாள்-2011. 8)*

கொற்றவையிடத்துப் பேய்கள் நொடி சொல்லுதல் உண்டு என்பதைக் கலித்தொகைக் கூறுகின்றது. சான்று,

**பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய் நொடித்தாங்கு (கலி. 89)**

என்று கூறப்பட்டுள்ளது.

சங்க இலக்கியங்களில் அணங்கு என்று கூறப்படும் தெய்வமும் கொற்றவையின் செயல்பாடாகவே அமைகிறது. “அணங்கு” என்ற சொல் சங்க இலக்கியங்களில் தெய்வம், அழகு, நோய் பேய், துன்பம், அச்சம் என்னும் பெயர்களில் அழைக்கப்படுகிறது. எனினும் தெய்வம் என்ற பொருளில் பெரும்பான்மையாக வழங்கப்பட்டுள்ளது.

அணங்கு என்பது தெய்வம் என்று பொதுவாக வழங்கப்படும். வருத்துதல் அல்லது துன்புறுத்துதல் என்ற பொருளிலும் வருகிறது. தெய்வ மகளிர் தீண்டி வருத்தும் தெய்வம், முருகன், தேவி, பேய், மானிடப்பெண், அச்சம் என்ற பொருளில் அருகி வருகிறது. அணங்கென்பன பேயும், பூதமும், பாம்பும் ஈறாகிய பதினென்கண்ணும் நிரயபாலரும் பிறரும் காவற்பெண்டிர் முதலாயினருமாவர். அணங்கு என்பது ஊருணித்துறையில் உறைதல் என்பதாகும். தாக்கணங்கு என்பது தீண்டிவருத்தும் தெய்வம் என்பதாகும். நீராடும் துறையில் உறைதலும் அணங்காகும். *(சங்க இலக்கிய தொன்மக் களஞ்சியம். தொ.1.50)*

**பெருங்கடற் பரப்பின் அமர்ந்துறை அணங்கே**
**(நற். 1550)**

**அணங்கு சொல் அடுக்கம் பொழியும்**
**(புறம். 151)**

**அணங்கு அறி கழங்கின் கோட்டம் சுட்டி**
**(நற். 47)**

**அணங்குடை ஆரிடை**
**(கலி. 49)**

**அணங்குடை நெடுவரை உச்சியின் இழிதரும்**
**(அகம். 22)**

**ஆடுகழை நரலும் அணங்குடை கவாஅன்**
**(அகம். 72)**

**அணங்குடைப் பனித்துறைத் தொண்டி**
**(ஐங்கு. 174)**

என்னும் சங்கப்பாடல் அடிகளில் அணங்கு அச்சம் தரும் தெய்வம் என்பதைச் சுட்டுகின்றது. பழந்தமிழரின் தாய்த்தெய்வ வழிபாட்டில் மிக இன்றியமையாத இடம் கொற்றவை வழிபாட்டிற்கு உண்டு. பழந்தமிழர் வழிபட்ட பல்வேறு பெண் தெய்வங்களில் கொற்றவை வழிபாடே இன்றியமையாததாக இருந்துள்ளது.

சங்க இலக்கியங்களில் இடம்பெறும் பெண் தெய்வங்கள், கன்னித்தெய்வங்கள், தாய்த்தெய்வங்கள் என இருவேறு நிலைகளில் குறிப்பிடப்பட்டாலும் அவை தாய்த் தெய்வங்களே ஆகும். தாய்த்தெய்வத்தைத் தாயாகவும், கன்னியாகவும் உருவகப்படுத்திக் கூறுவது பழங்காலத்திலிருந்தே மரபாக உள்ளது. அவளை எல்லோரையும் பெற்ற தாயாகக் கருதுவதும் அழியாக் கன்னியாகக் கருதுவதும் சுமேரியா, எகிப்து, ஆசீரியா, இந்தியா ஆகிய நாடுகளின் பழைய நாகரீகங்களில் காணப்படுகிறது. சங்க இலக்கியங்களில் குறிப்பிடும் கடல்கெழு செல்வியும், கானமர் செல்வியும் தாய்த்தெய்வங்களே என்கிறார். பி.எல்.சாமி. (1975)

கொற்றவை குறித்த நேரடிச் சான்றுகள் இல்லை. கொற்றவை வழிபாடு குறித்து சங்க இலக்கியங்களில் உரிய குறிப்புகள் இடம்பெறவில்லை. கொற்றவை என்ற பெயருக்கு “பெருங்காட்டுக் கொற்றி” என்னும் அடையாளத்தைப் பரிபாடலும், கலித்தொகையும் தருகின்றன.

கொற்றவை பற்றிச் சங்க இலக்கியங்கள் தரும் தகவல்கள் மிகக் குறைவு. கொற்றவை என்ற சொல்லாட்சியே சங்க இலக்கியத்தில் இல்லை. “பெருங்காட்டுக் கொற்றிக்கப் பேய் நொடித்தாங்கு” (கலி.89) எனவும், நெற்றி விழியா நிறைத்திலகம் இட்டாளே கொற்றவைக் கோலங்கொண்டு ஓர் பெண் (பரி-11) எனவும் வருவன சங்கப் பிற்காலச் சான்றுகளாகும். அவ்வாறே கொற்றவை சிறுவன்(திரு.முருகு.250) என முருகன் சுட்டப்பெறும் ஓரிடத்துக் கொற்றவையின் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. “விறல் கெழு சூலி’ (குறுந்.218) எனவும், உருகெழு மரபின் அயிரை (பதிற்.79,90) எனவும் குறிக்கப்பெறும் தொடர்கள் கொற்றவையைக் குறிப்பிடுவதாகக் கூறுவர். “அச்சம் தரத்தக்க இத்தெய்வம், வெற்றிக்குரியவள் என்பதும், அவள் முருகனது தாய் என்பதும், அவள் மலை காடு வாழ்தெய்வம் என்பதும் மேல் குறிப்புகள் தரும் தகவல்கள் ஆகும். இவை தவிரக் கொற்றவை வழிபாடு பற்றிய வேறு செய்திகளைச் சங்க இலக்கியங்கள் வழி அறிய இயலவில்லை” என்று சிலம்பு நா. செல்வராசு(2009:12) கூறுகின்றார்.

தொல்காப்பியத்தில் திணைத் தலைமை தெய்வமாகக் கொற்றவையைக் குறிப்பிடவில்லை என்றாலும் தம் புறத்திணையில் வெட்சித் திணையியல் வெட்சித்திணைப் பகுதியில் புறநடைத் துறையாகக் கொற்றவை நிலை என்ற துறையினைக் காணமுடிகின்றது.

**மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த**
**கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே**
**(தொல்.பொரு.புறத்:4)**

என்பதாகும்.

திணைக் குடிகளின் கொற்றவை வழிபாட்டை நோக்குங்கால் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் வெற்றிவெல் போர்க் கொற்றவையை எயினர்கள் வணங்கியுள்ளனர். இத்தெய்வம் பழையோள் என்று போற்றப்படக்கூடிய தொல்த்தாய் தெய்வமாகும். இத்தெய்வம் அணங்கு என்று அடையாளப்படுத்தப்படுகிறது.

சங்கப் பாடல்கள் கூறும் சூர், அணங்கு முதலிய வருத்தம் மற்றும் அச்சத்தைத் தரும் இயற்கை இகந்த ஆற்றல்களுக்குரிய நம்பிக்கைகளே பின் வழிபாட்டுச் சடங்குகளாகப் பரிணாமம் பெற்றுள்ளன. பழந்தமிழர் மக்களின் தாய்த்தெய்வ வழிபாட்டின் தொடக்கத்தை இத்தகு சூர், அணங்கு முதலிய இயற்கை ஆற்றலால் அறியமுடிகிறது.

**கொற்றவையின் படிநிலை**

காடுகிழார், காடுகிழவோள், கானமர்ச் செல்வி எனப் பண்டைத் திணைக்குடிகளின்

தாய்த்தெய்வத்தை அடையாளப்படுத்தினர். இனக்குழு மக்களின் வேட்டையில் வெற்றி தருபவளாக இத்தெய்வம் இருந்துள்ளதை அறியமுடிகிறது. இத்தெய்வமே பின் கொற்றவை என்னும் வடிவத்தைப் பெற்றுள்ளது. இனக்குழு மக்களின் வேட்டையில் வெற்றியைக் கொடுக்கும் தெய்வமாக இருந்துள்ளாள். காடுகிழார் உணவு சேகரிக்கும் காலத்தில் பயிர்த்தொழில் தெய்வமாகவும், வேட்டையாடும் காலத்தில் வெற்றியின் தெய்வமாகவும் இருந்த இத்தெய்வமே பின் குறிஞ்சி நிலத் தாய்த்தெய்வமாக விளங்கியுள்ளது. இத்தாய்த்தெய்வம் கொற்றவை என்றும் வளர்ச்சி அடைகிறது. முல்லை நிலத்தில் மேய்ச்சல் வாழ்க்கையும் வன்புலங்களில் பயிர்த்தொழிலும் தொடங்கின. மாடுகள் செல்வ வளமாகப் போற்றப்பட்டன. மாடு களைக் கவர்ந்து முல்லை நிலத்தின் போரானது வெட்சிக்குப் புறனாகக் கொற்றவை நிலையை தொல்காப்பியம் கூறுவதால் இது முல்லை நிலமக்களின் தெய்வ வழிபாட்டுக் காலத்தின் நிலையாகும். முல்லைநிலமும் குறிஞ்சி நிலமும் தம்முள் திரிந்து பாலையாகிய நிலம் உருவான போது அப்பாலை நிலத்தின் தெய்வமாக கொற்றவை நிலைப்பெற்றாள். பாலை நிலத்தின் தெய்வம் கொற்றவை என்பது தற்காலம் வரை தொடர்ந்து குறிப்பிடப்படுகிறது. கொற்றவை தமிழகத்தின் பழம்பெரும் தாய்த்தெய்வம் என்பது பற்றி நா.வானமாமலை (1996.76) கூறும்போது, “காடுகிழாள் என்ற மறுபெயரும் அவளுக்கு உண்டு. குறிஞ்சி நிலமக்கள் வேட்டைத் தொழிலில் இருந்து புராதனப் பயிர்த் தொழிலுக்குத் திரும்பிய காலத்தில் பெண்கள் ஆதிக்கம் பெறத்தொடங்கினார்கள். ஆகவே காட்டில் பெண்கள் பயிர் செய்யத் தொடங்கிய காலத்தில் காடுகிழாளும் தோன்றினாள்” என்கிறார்.

கொற்றவை தாய்த் தெய்வ வழிபாட்டின் தொடக்கமாகவும், அச்சம், துன்பம் தரக்கூடிய தெய்வமாகவும், வெற்றியைக் கொடுக்கும் தெய்வமாகவும் விளங்கியுள்ளாள். பண்டைத் திணைக்குடிகளின் அகப்புற வாழ்க்கையின் வழிபாட்டுத் தெய்வமாகவும் மிகத் தொன்மையானத் தெய்வமாகவும் கொற்றவை விளங்கியதை அறிய முடிகிறது.

## முடிவுரை

திணைக் குடிகளின் வழிபாட்டு மரபில் பெண்தெய்வங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கின்றன. அச்சத்தின் வழிப் பெண்தெய்வ வழிபாடுகள் அமைந்துள்ளன. அவற்றுள் கொற்றவை வழிபாடு மிகவும் இன்றியமையாதவகையில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பார்வை நூல்கள்

1. சாமிநாதையர். உ.வே. (உ.ஆ). 1955. குறுந்தொகை. சென்னை: திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.
2. ..................1949. ஐங்குறுநூறு. சென்னை: திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,
3. சுப்பிரமணியன். ச.வே. 2010. சங்க இலக்கியம். (மூலமும் தெளிவுரையும்) தொகுதி-2, சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
4. செயபால். இரா. (உ.ஆ). 2004. அகநானூறு. சென்னை: நீயுசெஞ்சுரி
5. சோமசுந்தரனார். (உ.ஆ). 1965. கலித்தொகை. சென்னை: திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
6. தட்ணாமூர்த்தி. அ. (உ.ஆ). 2004. ஐங்குறுநூறு. சென்னை: நீயுசெஞ்சுரி பதிப்பகம்.
7. துறைசாமிப்பிள்ளை. ஔவை (உ.ஆ). 2004. ஐங்குறுநூறு. (மூலமும் தெளிவுரையும்) சென்னை: திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,

8. நச்சினார்க்கினியர். (உ.ஆ). 2007. கலித்தொகை. சென்னை: திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
9. நாகராசன். வி. (உ.ஆ). 2007. குறுந்தொகை. சென்னை: நியூசெஞ்சுரி பதிப்பகம்.
10. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர். (உ.ஆ). 1952. நற்றிணை. சென்னை: திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
11. இராகவையங்கார். இர. 1983. குறுந்தொகை. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
12. இராமையாபிள்ளை. நா. 1999. நற்றிணை. சென்னை: வர்த்தமான் பதிப்பகம்.
13. துரைசாமிப்பிள்ளை. ஔவை. (மூலமும் உரையும்). 2004. ஐங்குறுநூறு. சென்னை: திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்தநூற்பதிப்புக் கழகம்,
14. இளம்பூரனர். (உ.ஆ). 1974 தொல்காப்பியம். பொருளதிகாரம். சென்னை: கழகவெளியீடு
15. நச்சினார்க்கினியர். (உ,ஆ). 1983. தொல்காப்பியம். பொருளதிகாரம். சென்னை:திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்தநூற்பதிப்புக்கழகம் லிமிடெட்.;
16. ..............................(2005). தமிழ் மக்கள் வரலாறு. சென்னை: தமிழ்க்கூடம்.
17. இராசமாணிக்கம். மா. 2013. தமிழர் திருமணத்தில் தாலி. சென்னை: நாம் தமிழர் பதிப்பகம்,
18. இராமகிருஷ்ணன். ஆ. 1982. அகத் திணை மாந்தர். மதுரை: சர்வோதய இலக்கியப் பண்ணை.
19. கைலாசபதி.க. 1966. பண்டைத் தமிழர் வாழ்வும்வழிபாடும். சென்னை: பாரிநிலையம்.
20. கோசம்பி.டி.டி. (மூ.ஆ). 1989. எஸ். ஆர். என்.சத்யா (மொ.ஆ), பண்டைய இந்தியா அதன் பண்பாடும் நாகரிகமும் பற்றிய வரலாறு, சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
21. சண்முகம்பிள்ளை. மு. 1996. சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
22. ............ (1997). சங்கத் தமிழர் வாழ்வியல், சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
23. சாமி. பி.எல். 1975. தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு. சென்னை: நியூசெஞ்சுரி பதிப்பகம்.

**மானிடவியல்**

1. பக்தவத்சல பாரதி. சீ. 1990. பண்பாட்டு மானிடவியல். சிதம்பரம்: மெய்யப்பன் ஆய்வகம்.
2. .......................... (2003). தமிழகத்தில் நாடோடிகள், சங்க காலம் முதல் சமகாலம் வரை. புதுவை: வல்லினம் பதிப்பகம்.
3. ......................... (2002). தமிழர் மானிடவியல். திருச்சி. அடையாளம் பதிப்பகம்.
4. ...........................(2005). மானிடவியல் கோட்பாடு. சிதம்பரம்: மெய்யப்பண் ஆய்வகம்.
5. .............................(2015). பாணர் இனவரைவியல். திருச்சி. அடையாளம் பதிப்பகம்.
6. பக்தவத்சல பாரதி. சீ, சிலம்பு. நா. செல்வராசு, இரா. சம்பத். (2011). பண்பாட்டியல் நோக்கில் பண்டைத் தமிழர் சமயமரபுகள். புதுச்சேரி: புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்.